# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

மற்றும்

# அண்ணாமலை பல்கலைக்கழகம்

### இணைந்து நடாத்தும்

## தமிழ்மொழி அடிப்படைக் கற்கைநெறி
## சிறப்புத் தேர்வுக்கான விண்ணப்பம் கோரல்

---

தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து இந்தியா தமிழ்நாடு அண்ணாமலை பல்கலைக்கழகத்துடன் இணைந்து இக் கல்வியாண்டு முதல் பட்டப்படிப்புகளினையும், பட்டப் பின்படிப்புகளினையும் தமிழ்மொழி, நுண்கலைகள் மற்றும் யோகா ஆகிய துறைகளில் மேற்கொள்கின்றது.

இக் கற்கை நெறிகளுள் ஒன்றாகிய தமிழ் இளங்கலைமாணி (B.A தமிழ்) பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு:

- இலங்கை க.பொ.த உயர்தரம் (தமிழ்மொழி மூலம்) சித்தி அல்லது
- இந்திய கல்வி முறையில் எச்.எஸ்.சி (மேனிலைப்பள்ளிக் கல்விச்சான்றிதழ்) அல்லது
- தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடாத்தும் தமிழ்மொழி அடிப்படைக் கற்கைநெறி (தமிழ்மொழி ஆண்டு 12) சித்தி அல்லது
- அங்கீகரிக்கப்பெற்ற பல்கலைக்கழகத்தில் ஏதாவது ஒரு துறையில் தமிழ்மொழி மூலம் பட்டப்படிப்பு அல்லது
- தமிழ்மொழி ஆசிரியர் பட்டயப்படிப்புடன், சுவிற்சர்லாந்து நாட்டு அரச சட்டத்திற்கமைவாக பல்கலைக்கழகம் புகுவதற்கான தகுதி ஆகியவற்றில் ஏதாவதொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆதலால், B.A தமிழ் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான தகைமைகளுள் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்காக:

- 2015 / 2016 கல்வியாண்டிலும் அதற்கு முன்னரும் தமிழ்க் கல்விச்சேவையினால் நடாத்தப்பெற்ற இறுதிப் பொதுத்தேர்வில் சித்தியெய்தியவர்களும்
- இலங்கையில் க.பொ.த சாதாரணத் தேர்வும் மற்றும் சமனான கல்வித்தகைமையும்
- போதிய தமிழ்மொழியறிவும் தொடர்கல்வி ஆர்வமும்

ஆகிய தகைமைகளுள் ஒன்றினைக் கொண்டவர்கள் தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடாத்தும் தமிழ்மொழி அடிப்படைக் கற்கைநெறி சிறப்புத் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்.

இத்தேர்வுக்கான விண்ணப்பப் படிவத்தினை கல்விச்சேவையின் இணையத்தளத்தில் (www.tamilschool.ch) பெற்றுக்கொள்ளலாம். தேர்வு **27.05.2018 ஆம் நாள்**

**ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணி முதல் 13:00 மணிவரை** எழுத்துத்தேர்வாக சுவிற்சர்லாந்து நாட்டில் நடைபெறவுள்ளது. விண்ணப்பிப்போரின் எண்ணிக்கைக்கேற்ப தேர்வு நிலையங்கள் தீர்மானிக்கப்பெறும்.

- **விண்ணப்ப முடிவு நாள் : 31.03.2018 சனிக்கிழமை**
- **தேர்வுக் கட்டணம் : 60 சுவிஸ் பிராங்குகள்**
- **தேர்வுக் கட்டணம் செலுத்தவேண்டிய தபாற்கணக்கு இலக்கம்: 87-711742-9**
- **இச் சிறப்புத்தேர்வு ஒருமுறை மட்டுமே நடைபெறும்**
- **விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:**

Special Examination
Tamil Education Service Switzerland
Regensbergstrasse 238
Postfach 6711
8050 Zürich.

- **பிந்திய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பெற மாட்டாது**

இச் சிறப்புத்தேர்வு வினாத்தாள் **தமிழ்க்கல்விச்சேவையினது தமிழ்மொழி ஆண்டு 12 பாடநூல் மற்றும் தமிழ்மொழி இலக்கண வழிகாட்டி** ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கும்.